தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 6, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, சனவரி 19, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க் **குடிமகன்** அவர்கள் தலைமையில் காலை 9—00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ;

'' நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று''.

ஒருவர் நமக்கு இதற்கு முன்னால் செய்த நன்மையை மறப்பது அறம் ஆகாது. அவர் தீமையைச் செய்து இருப்பாராயின், அதனை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது.

1. இரங்கற் குறிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கீழ்க்கண்ட முன்னாள் உறுப்பினர்கள் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்:

உறுப்பினர் பெயர்.	மறைந்த நாள்.	தொகுதியும் பணியாற்றிய காலமும்.
(1)	*(2)*	*(3)*
திருவாளர்கள்—		
அந்தோணி பீட்டர்	13–07–1989	திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறைத் தொகுதி 1952 முதல் 1957 வரை உறுப்பினர்.
இல. ஆறுமுகம் ..	13–08–1989	தென்னாற்காடு மாவட்டம், திருநாவலூர் தொகுதி 1977 முதல் 1980 வரை உறுப்பினர்.

டி 2 எ 53-367—1

உறுப்பினர் பெயர்.	மறைந்த நாள்.	தொகுதியும் பணியாற்றிய காலமும்.
(1)	(2)	(3)
திருவாளர்கள்—		
பி. எஸ். கே. லட்சுமிபதி ராஜு.	04–11–1989	திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் பழனி தொகுதி 1957 முதல் 1962 வரை உறுப்பினர்.
எம். ஆர். கிருஷ்ண மூர்த்தி. ..	12–11–1989	தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார் கோவில் தொகுதி 1962 முதல் 1967 வரை உறுப்பினர்.
பாபு ஜனார்த்தனன் ..	14–11–1989	திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், செய்யாறு தொகுதி 1980 முதல் 1984 வரை உறுப்பினர்.
வீ. முனுசாமி ..	25–11–1989	தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி தொகுதி 1967 முதல் 1970 வரை உறுப்பினர்.
டி. எஸ். அர்த்தநாரி ..	29–12–1989	சேலம் மாவட்டம், திருச்செங்கோடு (பொது) தொகுதி 1952 முதல் 1957 வரை உறுப்பினர்.
கே. ராமசுப்பு ..	31–12–1989	சிதம்பரனார் மாவட்டம், கடம்பூர் (பொது) தொகுதி 1957 முதல் 1962 வரை உறுப்பினர்.

1990 சனவரி 19] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர் பெயர்.	மறைந்த நாள்.	தொகுதியும் பணியாற்றிய காலமும்.
(1)	(2)	(3)
திருவாளர்கள்—		
எஸ். என். சோமயாஜுலு. ..	09–01–1990	திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலி தொகுதி 1952 முதல் 1957 வரை உறுப்பினர்.
அ. து. குலசேகர் ..	16–01–1990	கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி 1980 முதல் 1984 வரை உறுப்பினர்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித் துளி மௌனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

நாட்ராம்பள்ளி தொகுதியில் தொழிற்சாலைகள் அமைத்தல்

*509. திரு. ஆர். மகேந்திரன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?